நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பட்டுக்கோட்டை.
முன்னிலை – திரு. த.சுதர்சன்.,எம்.ஏ.எல்.எல்.பி.,
நீதித்துறை நடுவர், பட்டுக்கோட்டை.
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ம் நாள் புதன் கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண்.71/2022
**CNR NO. TNTJ11-000544-2022**

அரசு சார்பாக காவல் உதவி ஆய்வாளர்,
பட்டுக்கோட்டை நகர காவல் நிலையம்
குற்ற எண்.102/2019 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

ஜேம்ஸ் (வயது –34/2026),
த/பெ. ராயப்பன்,
கழுகப்புலிக்காடு, பிள்ளையார்கோவில் தெரு,
பட்டுக்கோட்டை தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.

.... எதிரி

**வழக்கு சுருக்கம்**

| வ.எண் | விவரங்கள் | விளக்கம் |
|---|---|---|
| 1) | வழக்கு எண் | 71/2022 |
| 2) | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | பட்டுக்கோட்டை நகர காவல் நிலையம், 102/2019 |
| 3) | எதிரியின் பெயர், தந்தை பெயர் மற்றும் வயது, தொழில், முகவரி, | ஜேம்ஸ் ( 34/2026),<br>த/பெ. ராயப்பன்,<br>கழுகப்புலிக்காடு, பிள்ளையார்கோவில் தெரு,<br>பட்டுக்கோட்டை தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம். |
| 4) | சம்பவம் நடைபெற்ற நாள் | 05.02.2019 |
| 5) | புகார் அளித்த நாள் | 05.02.2019 |
| 6) | கைது செய்த நாள் | 05.02.2019 |
| 7) | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 06.02.2019 |
| 8) | அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்கு அனுப்பிய தேதி | – |
| 9) | விசாரணை தொடங்கிய தேதி | 05.03.2026 |
| 10) | விசாரணை முடிவுற்ற தேதி | 06.03.2026 |

| | | |
|---|---|---|
| 11) | தீர்ப்பு அல்லது உத்தரவு | அரசு தரப்பில், குற்றம் சாட்டப்பட்டவர்க்கு எதிரான பிரிவுகள் 386,506(2) இதச வின் கீழான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி மெய்பிக்க தவறிவிட்டனர் என முடிவு செய்து சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்டுவர்க்கு நல்கி குற்றவாளி இல்லை என்று கு.வி.மு.ச பிரிவு 248(1) விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது. |
| 12) | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்குதல் | ஆம் |
| 13) | காலதமதத்திற்கான காரணம் | குற்றப்பத்திரிக்கை 08.08.2022 –ம் தேதி அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.08.08.2022 ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தால் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது. இவ்வழக்கீன் தீர்ப்புரை 11.03.2026 ம் தேதி அன்று திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 08.08.2022–ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் இன்றையதினம் 11.03.2026–ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, குற்றமுறையிடுபவர் தரப்பில் திரு.j.சரவணகுமார்., எம்.ஏ.பி.எல்., அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரி தரப்பில்.,திரு.M.விஜய்.,M.C.A.,L.L.B., அவர்கள் முன்னிலையாகியும் வழக்கு ஆவணங்கள், சாட்சியங்கள் அனைத்தும் பரிசீலனை செய்து இன்று வழங்கும்,

## <u>தீர்ப்புரை</u>

### 1. <u>குற்றப் பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

குற்றமுறையீடுபவரால் குற்றம் சாட்டப்பட்டவர்க்கு எதிராக 386,506(2) இதச வின் குற்றத்திற்காக எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>நகல் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு வனைதல்:</u>**

எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக எதிரிக்கு பிரிவு 207 குவிமுச வின் கீழ் வழங்கப்பட்டது.

3. ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரியின் மீது குற்றம் பற்றி வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால், எதிரி மீது பிரிவு 386,506(2) இதச வின் படி வனைந்து, குற்றச்சாட்டு பற்றி தமிழில் விளக்கி வினவிய போது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தம்மிச்சையாக மேற்கண்ட குற்றச்சாட்டை மறுத்ததால் வழக்கானது அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

**<u>4. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>**

இவ்வழக்கின் குற்றம் சாட்டப்பட்ட ஜேம்ஸ் என்பவர் வாதியை கத்தியை காட்டி மிரட்டி சட்டைப்பையில் இருந்த பணம் ரூ. 1,400/–ஐ எடுத்து கொண்டு இதை வெளியில் சொன்னால் தீர்த்து கட்டி விட்டுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தற்காகவும், இச்சம்பவம் தொடர்பாக மேற்படி குற்றம் சாட்டப்பட்டவர்க்கு எதிராக பட்டுக்கோட்டை நகர காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை பெற்று பட்டுக்கோட்டை நகர காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதனை புலன் விசாரணைக்கு வைக்கப்பட்டது. பின்பு வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்தை பார்வை இட்டு சாட்சிகளை விசாரித்து, குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மேற்படி பிரிவுகளின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 05.02.2019ந் தேதி இரவு 07.30 மணியளவில் மணிக்கூண்டு அருகில் உள்ள பள்ளவாசல் எதிரில் தள்ளு வண்டியில் பழக்கடை நடத்தி வரும் போது எதிரியானவர் வாதியை கத்தியை காட்டி மிரட்டியும், வாதியின் சட்டைப்பையில் இருந்த பணம் ரூ. 1,400/–ஐ எடுத்து கொண்டு இதைவெளியில் சொன்னால் தீர்த்து கட்டிவிடுவேன் என்று மிரட்டியதற்காகவும், எதிரியின் மீது 386,506(2) இதச வின்

கீழும் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் அசா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளன. அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு சான்று பொருள் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன. அசா.1 மற்றும் அசா.2வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கிற்கும், கு.வி.மு.ச. பிரிவு 161(3) ன் படியான வாக்குமூலத்திற்கும், முரணமாகவும் சாட்சியம் அளித்துள்ளனர்.

**6. அரசு தரப்பு சாட்சியங்களின் சாட்சிய சுருக்கம்:**

அ.சா.1 திரு. பிரகாஷ் புகார்தாரர் தனது சாட்சியத்தில், வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது.புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சாஆ.1 என்னுடையது.

அ.சா.2 சுரேஷ்குமார் கைப்பற்றுதல் மகசர் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார். இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. என் முன்பாக எந்த பொருளையும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2, அ.சா.ஆ.3 தன்னுடையது. கைப்பற்றப்படவில்லை.

அ.சா.3 திரு. புண்ணியமூர்த்தி SSI தனது சாட்சியத்தில், ப.சா.7 க்காக சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 05.02.2019 ந் தேதி தென்னரசு நிலைய பொறுப்பில் இருந்த போது அ.சா1 பிரகாஷ் என்பவர் கொடுத்த புகாரை பெற்று (அ.சா.ஆ.1) குற்ற எண். 102/2019, சட்டப்பிரிவு 386,506(2) இதச வின்படி முதல் தகவல் அறிக்கை (அசா.ஆ.3) ஆக பதிவு செய்துள்ளார். பின்பு வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 05.02.2019–ந் தேதி சுமார் 20.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலை சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர் அசா.ஆ.6 மற்றும் மாதிரி வரைபடம் அசா.ஆ. 7 ஆக தயார் செய்து வாக்குமூலம் பெற்றார். சம்பவ சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்கு மூலம் பதிவு செய்தார். எதிரியை கைது செய்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் (அ.சா.ஆ.6)

அடிப்படையில் வழக்கின் தடயப்பொருளை கைப்பற்றதல் மகசர் (அ.சா.ஆ.7) கைப்பற்றினார். தடயப்பொருள்களை படிவம் –95 அசா.ஆ.8ன் மூலம் நீதிமனறத்திற்கு அனுப்பி வைத்தார். தடயப்பொருளான கத்தி அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 பணம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது. பின்னர் வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 386,506(2) இதச வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான அம்சங்களை தொகுத்து 313(1)(b)இதச வின் படி வினவிய போது குற்றம் சாட்டப்பட்டவர் அவற்றை பொய் சாட்சியம் என மறுத்தார். குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் முன்நிறுத்தப்படவில்லை.

**7.தீர்வு:–**

இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவெனில், எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

அரசு தரப்பின் குற்றம் சாட்டப்பட்டவர்கள் வாதியை அசிங்கமாக திட்டியும், காயத்தை ஏற்படுத்தியும், கொலை மிரட்டல் விடுத்தற்காகவும், இவ்வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருதரப்பும் கேட்கப்பட்டது, ஆவணங்களும், சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்களும் பரிசீலிக்கப்பட்டது. அசா.1 மற்றும் அ.சா.2 வரையிலானவர்கள் சம்பவம் குறித்து போலிசார் விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வாக்குமூலம் கொடுத்து விட்டு தற்போது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக பிறழ் சாட்சியமாக மாறி சாட்சியம் அளித்துள்ளனர். அரசு தரப்பு வழக்கறிஞர் அசா.3 மூலமும் அரசு சான்றாவணம் மூலமும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு மெய்பிக்கப்ட்டுள்ளது என்று வாதிட்டார்.

குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கபடவில்லை என்று வாதிட்டார்.

இந்நிலையில் அசா.1, மற்றும் அ.சா.2, சாட்சியங்களின் சாட்சியம் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மெய்பிக்கும் வகையில் அமைந்துள்ளதா? என பரிசீலனை செய்வது அவசியமாகிறது. அசா.1, வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபராகவும் எதிரியை நேரில் பார்த்த சாட்சியாகவும் முன்னிலை படுத்தப்பட்டுள்ளார். மேற்படி சாட்சி அரசு தரப்பில் முதல் விசாரணை செய்யப்பட்ட போது சம்பவத்தில் ஈடுபட்ட நபரை பார்க்க வில்லை என்றும், அ.சா.2ன் முன்பு எதிரியிடம் இருந்து தடயப்பொருட்களை கைப்பற்றியதாக ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியாக முன்னிடப்படுள்ளார். அசா.1, அ.சா.2 தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அரசு தரப்பில் மேற்படி சாட்சிகள் பிறழ்சாட்சியங்கள் என குறிப்பிட்டு நீதிமன்ற அனுமதியை பெற்று குறுக்கு விசாரணை செய்துள்ளன. மேற்படி சாட்சியங்கள் அரசு தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தின் போது குற்றச்சாட்டு பற்றி ஏதுவும் தெரியாது என்றும், அரசு தரப்பு குறுக்கு விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டவர் சம்பவத்தில் ஈடுபட்டதாக புகார் மனுவில் தெரிவித்து புலன் விசாரணை அதிகாரியின் வாக்குமூலம் கொடுத்ததாக குறிபிட்டுள்ளனர் என்பது தெரிய வருகிறது. எனவே மேற்படி சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

எனவே, எதிரியிடமிருந்து தான் வழக்கின் தடயப்பொருள்களை போலிசார் கைப்பற்றினார்கள் என்று அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை.

எனவே, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அசா.3 மற்றும் புலன் விசாரணை அதிகாரியான சாட்சியம் மட்டுமே வைத்து குற்றம் சாட்டப்பட்டவர் தான் குற்ற இறுதி அறிக்கையில் விபரிக்கப்பட்ட குற்ற செயலில் ஈடுபட்டார் என முடிவு செய்ய இயலாது. எனவே, பாதிக்கப்பட்ட நபராக முன்னிடப்பட்டுள்ள மேற்படி அசா.1, –ன் சாட்சியம், அவர்களின் வாக்குமூலம் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் மாறுப்பட்டு முன்னுக்கு

பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், குற்ற இறுதி அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளவாறு சம்பவம் நடந்திருக்க கூடுமா? என்ற சந்தேகம் எழுகிறது.

எனவே, அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகனை மெய்பிக்கும் வகையிலான நம்பும்படியான சாட்சியத்தை முன்னிட தவறிவுள்ளதால், அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றசாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்க தவறியுள்ளார் என்று முடிவு செய்கிறது.

<u>8.முடிவாக</u>,

அரசு தரப்பில், குற்றம் சாட்டப்பட்டவர்க்கு எதிரான பிரிவுகள் 386,506(2) இதச வின் இதச வின் கீழான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி மெய்பிக்க தவறிவிட்டனர் என முடிவு செய்து சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்டுவர்களுக்கு நல்கி குற்றவாளிகள் இல்லை என்று கு.வி.மு.ச பிரிவு 248(1) விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது.

ii)இவ்வழக்கில் வழக்கு சொத்து CP.No. 77/2026ல் கைப்பற்றப்பட்ட வெள்ளை நிற கைப்பிடி கத்தி மற்றும் பணம் நீதிமன்ற பாதுகாப்பில் இருந்து வருகிறது. பணத்தை மனுதாரர் இந்நீதிமன்றத்தில் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளலாம். ஊதா மற்றும் வெள்ளை நிற கைப்பிடியுடன் கூடிய கத்தி உபயோகமற்றது என்பதால் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரி பிணையில் தான் இருந்து வருகிறார். அதனால் அவருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரத்தையும் மேல் முறையீட்டுக் காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது.

/இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் புதன் கிழமை ஆகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது./

SUDHARSAN T

Digitally signed by SUDHARSAN T
Date: 2026.03.11 17:50:53 +0530

நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. பிரகாஷ் |
| அ.சா.2 | திரு.சுரேஷ்குமார் |
| அ.சா3 | திரு. புண்ணியமூர்த்தி |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| | |
|---|---|
| அ.சாஆ1 | ம் தேதியிட்ட புகார் மனுவிலுள்ள கையொப்பம் |
| அ.சாஆ.2 | 10.11.2025ம் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் |
| அ.சாஆ.3 | 10.11.2025ம் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் |
| அ.சாஆ.4 | 10.11.2025ம் தேதியிட்ட புகார் மனு |
| அ.சாஆ.5 | 10.11.2025ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சாஆ.6 | 10.11.2025ம் தேதியிட்ட பார்வை மகசர் |
| அ.சாஆ.7 | 10.11.2025ம் தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| அ.சாஆ.8 | 10.11.2025ம் தேதியிட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி. |
| அ.சாஆ.9 | 10.11.2025ம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகசர் |
| அ.சாஆ.10 | படிவம்–95 |

<u>அரசு தரப்பு சான்றுபொருள்–</u> கத்தி மற்றும் பணம்

<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப் பொருட்கள்</u> – இல்லை

SUDHARSAN T

Digitally signed by SUDHARSAN T
Date: 2026.03.11 17:50:36 +0530

நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.